இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்(கள்) 9533-9537/2019

(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 5395-5399/2016-லிருந்து எழுகிறது)

பி. சிங்காரவேலன் மற்றும் பலர்,
முதலானோர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

மாவட்ட ஆட்சியர், திருப்பூர்,
திருப்பூர் மாவட்டம் மற்றும் பலர்,
முதலானோர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 9538-9546/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 5605-5613/2016-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 9547-9549/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 5391-5393/2016-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 9551-9559/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 5367-5375/2016-லிருந்து எழுகிறது)

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 9560-9561/2019

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் /2019-இலிருந்து எழுகிறது)

[வழக்கு குறிப்பேடு எண் 42301/2017]

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்:

உரிமையியல் மேல்முறையீடுகள் என்கிற சி.அ.ம. (உரிமையியல்) எண்கள் *5395-5399/2016*;

உரிமையியல் மேல்முறையீடுகள் என்கிற சி.அ.ம. (உரிமையியல்) எண்கள் *5605-5613/2016*;

உரிமையியல் மேல்முறையீடுகள் என்கிற சி.அ.ம. (உரிமையியல்) எண்கள் *5391-5393/2016* மற்றும்

உரிமையியல் மேல்முறையீடுகள் என்கிற சி.அ.ம. (உரிமையியல்) எண்கள் *5367-5375/2016*

அனுமதி வழங்கப்பட்டது.

2. தமிழ்நாடு அரசின் வெவ்வேறு துறைகளில் ஓட்டுநர்களாக உள்ள இங்குள்ள மேல்முறையீட்டாளர்களால் அவர்களுக்குரிய தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை சம்பள ஏற்றமுறைகள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்களைத் தள்ளுபடி செய்தும், மாநில அரசு அதிகாரிகளாக உள்ள இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீடுகளை அனுமதித்தும் சென்னை உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட *8.7.2015*-ஆம் தேதியிடப்பட்ட பொது இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராக இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. சுருங்கக்கூறின், மேல்முறையீட்டாளர்கள் *13.4.1998*-ஆம் தேதியிடப்பட்ட அரசாணை நிலை எண் *162* நிதித் (ஊதியப் பிரிவு) துறை (சுருக்கமாக "அ.ஆ. நிலை எண் *162*")-இன்படி முறையே ரூ.*5500-9000* மற்றும் ரூ.*5000-8000*

என்ற தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை சம்பள ஏற்றமுறைகளில் ஊதியம் வழங்கக் கோரியுள்ளதில், அவை, இதேபோன்ற நிலையிலுள்ள சுமார் 3000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேல்முறையீட்டாளர்கள் இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பல்வேறு தீர்முடிவுகளின் மீதும், மெட்ராஸ் உயர் நீதிமன்றம் பல்வேறு நீதிப்பேராணை மனுக்களிலும், மேல்முறையீடுகளிலும் அதிலுள்ள மனுதாரர்களுக்கு இதேபோன்ற சம்பள ஏற்றமுறையை வழங்கியதன்பேரிலும் சார்ந்துநின்றனர். இதனால் உயர் நீதிமன்றத்தின் கேள்விக்குள்ளான தீர்ப்புரை, இத்தீர்முடிவுகளில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்திலிருந்து தவறானவகையில் மாறுபட்டுள்ளது.

4. அதற்குமாறாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள், சில அரசு துறைகளிலுள்ள அலுவலர்களின் தரப்பில் ஏற்பட்ட தவறின் காரணமாகவே சில ஓட்டுநர்களுக்கு கோரப்பட்ட சம்பள ஏற்றமுறையை (அதிலிருந்து கொத்துகொத்தாக ஒட்டுமொத்த வழக்குகளும் எழுந்தன). தொடக்கத்தில் அளித்ததாகக்கூறி கேள்விக்குள்ளான தீர்ப்புரைக்காதரவாக வாதிட்டனர். இதனால் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கு பொருந்தக்கூடிய சம்பள ஏற்றமுறைகள் முறையே ரூ.4300-6000 மற்றும் ரூ.4000-6000 ஆகும் எனச் சமர்ப்பிக்கப்பட்டது.

5. அ.ஆ. நிலை எண் 162-இன்படி, இந்நீதிமன்றத்தின் பல்வேறு அமர்வுகள் உயர் நீதிமன்றத்தின் தீர்முடிவுகளில் தெரிவுநிலைக்காக ரூ.5000-8000-யும் மற்றும் சிறப்புநிலைக்காக ரூ.5500-9000-யும் அதிலுள்ள

சம்பந்தப்பட்ட ஓட்டுநர்களுக்கு சம்பள ஏற்றமுறைகளை அறுதியிட்டதற்கு எதிராக சிறப்பு அனுமதி மனுக்களைத் தள்ளுபடி செய்தன என்று எங்களது கவனத்திற்கு வந்துள்ளது. இது தொடர்பாக இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைக் குறிப்பிடுவது பொருத்தமானதென நாங்கள் கருதுகிறோம்.

நீ.பே.மே. எண் 67/2012	சி.அ.ம. (உரிமையியல்) ஆ.ப.வ. எண் 14715/2012	10.9.2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 383/2009	சி.அ.ம. (உரிமையியல்) எண் 35969/2009	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 391/2009	சி.அ.ம. (உரிமையியல்) எண் 6522/2010	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 382 முதல் 388/2009	சி.அ.ம. (உரிமையியல்) எண் 6523-6530/2010	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.ம. எண் 462/2012 நீ.பே.ம. எண் 24912/2010 நீ.பே.மே. எண் 383-391/ 2009	சி.அ.ம. (உரிமையியல்) எண் 22491/2012	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.ம. எண் 29119/2012	சி.அ.ம. (உரிமையியல்) எண் 33037/2013	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 791 மற்றும் 792/2013 நீ.பே.ம. எண் 2929 மற்றும் 2930/2012	சி.அ.ம. (உரிமையியல்) எண் 33588/2013	25.2.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 130, 131, 132/2011	சி.அ.ம. (உரிமையியல்) ஆ.ப.வ. எண் 12886-12888/2013	19.7.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 2243/2012	சி.அ.ம. (உரிமையியல்) ஆ.ப.வ. எண் 6602/2013	27.9.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது

நீ.பே.மே. எண் 526/2013	சி.அ.ம. (உரிமையியல்) ஆ.ப.வ. எண் 14007/2013	21.8.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது
நீ.பே.மே. எண் 24899/2014	சி.அ.ம. (உரிமையியல்) எண் 34265/2014	6.2.2017 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது

6. அது இவ்வாறிருக்கையில், மேற்படி இந்நீதிமன்றத்தின் உத்தரவுகள் யாவும் அனுமதி கட்டத்திலேயே பிறப்பிக்கப்பட்டுவிட்டன என்பதைக் குறிப்பிட்டாகவேண்டும். சி.அ.ம. (உ) எண் 35969/2009-ஐ கொண்ட மேல்முறையீடுகளின் தொகுப்புகளை முன்னணி வழக்காக விவாதிக்கையில் இந்நீதிமன்றத்தின் 3 நீதியரசர்கள் அமர்வால் பிறப்பிக்கப்பட்ட 25.2.2015-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> "வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் பின்வரும் உத்தரவு தள்ளுபடி செய்யப்பட்டது."

7. மேற்படி ஆணைகள் யாவும், அதிலுள்ள மனுதாரர்களுக்கு மேல்முறையிட சிறப்பு அனுமதியை வழங்க மறுப்பளிப்பதற்குட்பட்டவையே என்பதால் அவை காரணவிளக்கமற்ற ஆணைகள் எனத் தெளிவாகத் தெரிகின்றது. இத்தறுவாயில் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புரை அல்லது உத்தரவுக்கெதிராக ஒரு சிறப்பு அனுமதி மனுவைத் தள்ளுபடி செய்வது, அதனை உறுதிப்படுத்துவதல்ல என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது என்பதை

மீண்டும் நினைவுகொள்ளுதல் பயனுடையதாகும். இந்நீதிமன்றத்தின் அவ்வாறான காரணவிளக்கமற்ற ஆணையாக இருக்குமானால், அது அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 141-இன் கீழ் ஒரு சட்ட விளம்புகையாக அமையாது அல்லது இணைந்தொன்றல் கோட்பாட்டினை ஈர்க்காது. **குன்உறயாமத் -எதிர்- கேரள மாநில அரசு,** *(2000) 6* எஸ்.சி.சி. *359*-இல் இக்கருத்துரையின்பேரிலான இது தொடர்பான பின்வரும் விவாதம் பொருத்தமானதாகும்:

> "(i) ஒரு மேலமை நீதிமன்றம் முன்பாக, நீதிமன்றத்தாலோ, தீர்ப்பாயத்தாலோ அல்லது வேறு ஏதேனும் அதிகாரமைப்பால் பிறப்பிக்கப்படும் ஓர் ஆணைக்கு எதிராக மேல்முறையீடோ அல்லது சீராய்வோ தாக்கல் செய்யப்பட்டு, அந்த மேலமை நீதிமன்றம் அதன்முன்பு உள்ள வழக்கின் தீர்முடிவினை உறுதிசெய்யவோ அல்லது எதிர்மறையாக்கவோ, மாற்றியமைக்கவோ செய்யுமிடத்து, கீழமை நீதிமன்றத்தாலான தீர்முடிவு, மேலமை நீதிமன்றத்தாலான தீர்முடிவில் இணைந்துவிடுகிறது, மேலமை நீதிமன்றத்தின் முடிவே உயிர்ப்புடன் இருந்து, சட்டத்தின் பார்வையில் செயற்பாட்டுக்குரியதாகவும், நடைமுறைப்படுத்துவதற்குரியதாகவும் விளங்குகிறது.

(ii) அரசமைப்பின் வகுமுறைக்கூறு 136-இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரவரம்பை இரண்டு கட்டங்களாக பிரிக்கத்தக்கதாகும். முதற்கட்டமானது, மேல்முறையீடு தாக்கல் செய்வதற்காக சிறப்பு அனுமதிக்கான வேண்டுரையைத் தீர்வு செய்வது வரையிலானதாகும். இரண்டாம் கட்டமானது, மேல்முறையீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டு, சிறப்பு அனுமதி மனு மேல்முறையீடாக மாற்றம் அடைகிறபொழுது தொடங்கிவிடுகிறது.

(iii) இணைந்தொன்றல் கோட்பாடானது, உலகளாவிய அளவில் அல்லது வரையறையற்ற அளவில் பயன்படுத்தப்படும் கோட்பாடு அல்ல. அது மேலமை நீதிமன்றத்தால் செயலுறுத்தப்படும் அதிகாரவரம்பின் தன்மையைப் பொறுத்ததாகும், மேலும், முன்வைக்கப்படும் அல்லது முன்வைப்பதற்கு தகுதிவாய்ந்த எதிர்ப்புக்குரிய பொருளடக்கம் அல்லது விடயப்பொருள் ஆகியவை இணைந்தொன்றலின் பொருந்துகையைத் தீர்மானித்தல்வேண்டும். மேலமை அதிகாரவரம்பானது, அதன் முன்பு வைக்கப்படும் பிரச்சினையில் பிறப்பிக்கப்படும் உத்தரவினை எதிர்மறையாக்கவோ, மாற்றியமைக்கவோ அல்லது உறுதிசெய்யவோ தகுதிவாய்ந்ததாக இருக்கவேண்டும். அரசமைப்பின் வகுமுறைக்கூறு 136-இன் கீழ் உச்ச நீதிமன்றம்,

அதன் மேல்முறையீட்டு அதிகாரவரம்பைச் செயலுறுத்துகையில், அதனை எதிர்த்து மேல்முறையிடப்பட்டு வழங்கப்படும் தீர்ப்புரை-தீர்ப்பாணை அல்லது உத்தரவை எதிர்மறையாக்கவோ, மாற்றியமைக்கவோ அல்லது உறுதிசெய்யவோ செய்யலாம். மேலும், மேல்முறையிடுவதற்கான சிறப்பு அனுமதி மனுவைத் தீர்வுசெய்யும் விருப்புரிமை அதிகாரவரம்பைச் செயலுறுத்தும்போதல்ல. ஆகவே, இணைந்தொன்றல் கோட்பாடு முன் கூறியதற்கு பொருந்துமேயன்றி, பின் கூறியதற்கு அல்ல.

(iv) மேல்முறையிடுவதற்கான சிறப்பு அனுமதியை மறுக்கும் ஓர் ஆணை, காரணவிளக்கமற்ற ஆணையாகவோ அல்லது காரணவிளக்கமளிக்கும் ஒன்றாகவோ இருக்கலாம். அவற்றில் ஏதொன்றிலும் அது இணைந்தொன்றல் கோட்பாட்டினை ஈர்க்கவில்லை. மேல்முறையிடுவதற்கான சிறப்பு அனுமதியை மறுக்கும் ஓர் ஆணை, எதிர்ப்பின் கீழ் உள்ள ஆணைக்கு மாற்றீடாக இருக்காது. அதற்கு என்ன பொருளென்றால், நீதிமன்றமானது காக்கல் செய்யப்பட்டிருக்கும் மேல்முறையீட்டினை அனுமதிப்பதற்காக அதனுடைய விருப்புரிமையைச் செயலுறுத்துவதற்கு விரும்பவில்லை என்பதாகும்.

(v) மேல்முறையீட்டிற்கு அனுமதி மறுக்கும் ஆணை, காரணவிளக்கமளிக்கும் ஆணையாக இருந்தால், அதாவது, அனுமதி வழங்குவதற்கு மறுப்பதற்கான காரணங்களை அளிக்குமானால், அப்பொழுது அந்த ஆணை இரண்டு குறிப்புரைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக ஆணையில் அடங்கியுள்ள சட்ட வாசகம், அரசமைப்பின் வகுமுறைக்கூறு *141*-இன் பொருளுக்குள் உச்சநீதிமன்றத்தால் விளம்புகை செய்யப்படும் சட்டமாகும். இரண்டாவதாக, விளம்புகை செய்யப்படும் சட்டத்தைத் தவிர்த்து, ஆணையில் என்னவெல்லாம் கூறப்பட்டுள்ளதோ அவை உச்ச நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகளாகும், உச்ச நீதிமன்றம் நாட்டின் தலைமை நீதிமன்றமாக இருப்பதினால், நீதிசார் ஒழுங்குமுறை வாயிலாக அவை, அதிலுள்ள தரப்பினர்களையும், அதனைத் தொடர்ந்து எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையில் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரமைப்பினையும் கட்டுப்படுத்தும். ஆனால், கீழமை நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரமைப்பின் இந்த ஆணையானது, சிறப்பு அனுமதி மனுவை நிராகரிக்கும் உச்ச நீதிமன்றத்தின் ஆணையுடன் இணைந்து ஒன்றாகிவிட்டது என்றோ அல்லது உச்ச நீதிமன்றத்தின் ஆணையானது

தரப்பினர்களுக்கிடையேயான பிந்திய நடவடிக்கையில் முன்தீர்ப்பு தடையாக கட்டுப்படுத்தும் ஆணை மட்டுமே என்றோ கூறுவதாகாது.

(vi) மேல்முறையீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரவரம்பை துணைகொண்டோமானால், மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட ஆணை, இணைந்தொன்றல் கோட்பாட்டினை ஈர்க்கும். அந்த ஆணையானது, வெறுமனே உறுதிசெய்வதாகவோ, எதிர்மறையானதாகவோ அல்லது மாற்றியமைத்ததாகவோ இருக்கலாம்.

(vii) மேல்முறையீடொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதன்பேரில் அல்லது மேல்முறையீட்டிற்கு அனுமதிகோரும் மனுவானது, உச்ச நீதிமன்றம் முன்பு மேல்முறையீடாக மாற்றம் அடைந்திருப்பதன்பேரில், உ.வி.மு.ச., கட்டளை 47, துணை விதி (1)-இன்படி வகைசெய்யப்பட்டுள்ளவாறு, மறுஆய்வு மனுவினை ஏற்றுக்கொள்ளும் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு அதன் பின்னர் மறைந்துவிடுகின்றது."

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

இக்கருத்தானது, சமீபத்திய தீர்முடிவான **கோதே டிஸ்டில்லரிஸ் -எதிர்- ஸ்ரீ மகாதேஷ்வர சஉறகார சக்கரே கர்கானே லிமிடெட்.** (2019) 4

எஸ்.சி.சி. 376 உட்பட இந்நீதிமன்றத்தின் மிகுநிறைவான தீர்முடிவுகளில் பின்பற்றப்பட்டுள்ளது.

8. தற்போதுள்ள வழக்கிற்கு இக்கருத்துரைகளைப் பொருத்திப்பார்த்தோமானால், அரசாணை நிலை எண் 162-இன் பொருள்விளக்கம் குறித்து, இந்நாட்டின் சட்டத்தை உருவாக்குகின்ற இந்நீதிமன்றத்தால் தீர்ப்பேதும் பகரப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. அவ்வாறான சூழ்நிலையில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள் போன்றே ஒரேநிலையில் அமர்த்தப்பட்ட ஓட்டுநர்களுக்கு பரிகாரம் வழங்கியதற்கெதிரான சிறப்பு அனுமதி மனுக்களைத் தள்ளுபடி செய்த இந்நீதிமன்றத்தின் முந்திய ஆணைகளால் தாக்கத்திற்குட்படாத இம்மேல்முறையீடுகளை மேல்நடத்திச்செல்வதற்கு எங்களுக்கு தடையேதுமில்லை.

9. இவ்வழக்கிலுள்ள ஒட்டுமொத்த கருத்து மாறுபாடும், அரசாணை நிலை எண் 162-இன் பொருள்விளக்கத்தின்பேரில் இயங்குகிறது என்பது தெளிவு. இவ்வாணையின்படி, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஓர் ஊதிய ஏற்றமுறைக்குரிய ஊதிய ஏற்றமுறையின் அடிப்படையில் 25 நிலையான ஊதிய ஏற்றமுறைகளை திருத்தியமைத்து, தமிழ்நாடு திருத்தியமைக்கப்பட்ட ஊதிய ஏற்றமுறை விதிகள், 1998 (சுருக்கமாக "1998 விதிகள்") அறிவிக்கப்பட்டது. 1998 விதிகளுக்கான அட்டவணை I, திருத்தியமைக்கப்பட்ட ஊதிய ஏற்றமுறைகளைக்

குறிப்பிடும்பொழுது, அட்டவணை II ஒவ்வொரு திருத்தியமைக்கப்பட்ட சாதாரணநிலைக்கு பொருந்தக்கூடிய தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறைபற்றி குறிப்பிடுகின்றது. மேலும், அட்டவணை II-இல் குறிப்பிட்டுள்ளபடி, பதவி உயர்வுக்கு வாய்ப்பில்லாத பதவிகளுக்கு தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறை பொருந்தத்தக்கதாகும் என அரசாணையின் 4-ஆவது பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு மாநில அரசின் வெவ்வேறு துறைகளிலுள்ள ஓட்டுநர்கள் அட்டவணை I-இன்படி, திருத்தியமைக்கப்பட்ட சாதாரணநிலை ஊதிய ஏற்றமுறைகளுக்கு தகுதியுடையவர்கள் என்பதில் பிரச்சினையில்லை. மேலும், அவர்களுக்கு எந்தவொரு பதவி உயர்வுக்கான வாய்ப்புமில்லாததால் அவர்கள் முறையே 10 அல்லது 20 ஆண்டுகளுக்கான பணியை நிறைவுசெய்யும்போது, அட்டவணை II-இன் கீழ் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறைகள் பொருந்தத்தக்கதாகும். இங்குள்ள பிரச்சினை, அட்டவணை I மற்றும் II-இன் கீழ் ஓட்டுநர் பதவிகளுக்கு பொருந்தக்கூடிய பதிவுக்குறிப்புகள் தொடர்புடையதாகும். 1998 விதிகளின் கீழ் ஊதிய ஏற்றமுறைகள் திருத்தியமைப்புக்கு முன்னதாக 9.9.1989-ஆம் தேதியிட்ட அரசாணை நிலை எண் 818, நிதித் துறையால் நிர்ணயிக்கப்பட்டபடி ரூ.975-1660 என்ற ஊதிய ஏற்றமுறைக்கு ஓட்டுநர்கள் தகுதியுடையவர்கள் என்பது எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதமாகும். அதற்கிணங்க 1998

விதிகளின் அட்டவணை I-இன் கீழ் நேரிணையான திருத்தியமைக்கப்பட்ட சாதாரணநிலை ஊதிய ஏற்றமுறை பதிவுக்குறிப்பு எண் XX-இன்படியாக இருக்கும், அது கீழ்க்கண்டவாறு:

அட்டவணை - I

ஊதிய விகிதப் பட்டியல்

பிரிவு	**தற்போதுள்ள விகிதம்**	**திருத்தியமைக்கப்பட்ட விகிதம்**
(1)	*(2)*	*(3)*
	ரூ.	ரூ.
I	*5500-200-6500*	*17400-500-21900*
II	*5100-150-5700*	*16400-450-20000*
III	*4500-150-5700*	*15000-400-18600*
IV	*4100-125-4850-150-5300*	*14300-400-18300*
V	*3950-125-4700-150-5000*	*12750-375-16500*
VI	*3700-125-4700-150-5000*	*12000-375-16500*
VII	*3000-100-3500-125-4500*	*10000-325-15200*
VIII	*2500-75-2800-100-4200*	*9100-275-14050*
IX	*2200-75-2800-100-4000*	*8000-275-13500*
X	*2000-60-2300-75-3200-100-3500*	*6500-200-11100*
XI	*2000-60-2300-75-3200*	*6500-200-10500*
XII	*1820-60-2300-75-3200*	*5900-200-9900*
XIII	*1640-60-2600-75-2900*	*5500-175-9000*
XIV	*1600-50-2300-60-2660*	*5300-150-8300*
XV	*1400-40-1600-50-2300-60-2600*	*5000-150-8000*
XVI	*1350-30-1440-40-1800-50-2200*	*4500-125-7000*

பிரிவு	தற்போதுள்ள விகிதம்	திருத்தியமைக்கப்பட்ட விகிதம்
XVII	*1320-30-1560-40-2040*	*4300-100-6000*
XVIII	*1200-30-1560-40-2040*	*4000-100-6000*
XIX	*1100-25-1150-30-1660*	*3625-85-4900*
XX	***975-25-1150-30-1660***	***3200-85-4900***
XXI	*950-20-1150-25-1500*	*3050-75-3950-80-4590*
XXII	*825-15-900-20-1200*	*2750-70-3800-75-4400*
XXIII	*800-15-1010-20-1150*	*2650-65-3300-70-4000*
XXIV	*775-12-835-15-1030*	*2610-60-3150-65-3540*
XXV	*750-12-870-15-945*	*2550-55-2660-60-3200*

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

11. இதனை சார்ந்துநின்று, எதிர்மேல்முறையீட்டாளர்கள் சமர்ப்பித்ததாவது, ஓட்டுநர்கள் திருத்தியமைக்கப்பட்ட சாதாரணநிலை ஊதிய ஏற்றமுறையான ரூ.*3200-4900*-க்கு மட்டுமே தகுதியுடையவர்கள் என்பதாகும். பொருந்தக்கூடிய தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளைப் பொறுத்தவரையில், அட்டவணை I-இன் பதிவுக்குறிப்பு எண் XX-க்கு நேரிணையான அட்டவணை II-இன் வரிசை எண் *6*-இன்படி மேல்முறையீட்டாளர்கள் முறையே ரூ.*4300-6000* மற்றும் ரூ.*4000-6000* என்ற ஊதிய ஏற்றமுறைகளுக்கு தகுதியுடையவர்கள் என்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் கோருகின்றனர். அதற்குமாறாக மேல்முறையீட்டாளர்கள் கோருவதாவது, அட்டவணை II-இன் வரிசை எண் *8*-இன்படி அவர்கள், திருத்தியமைக்கப்பட்ட

தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5500-9000 மற்றும் ரூ.5000-8000-க்கு தகுதிவாய்ந்தவர்கள் என்பதாகும். இது குறித்து அட்டவணை II-ஐ குறிப்பிடுவது பயனுள்ளதாகும்.

அட்டவணை - II

திருத்தியமைக்கப்பட்ட தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறை

வரிசை எண்கள் (1)	சாதாரணநிலை (2)	தெரிவுநிலை (3)	சிறப்புநிலை (4)
	ரூ.	ரூ.	ரூ.
1.	2550-55-2660-60-3200	2650-65-3300-70-4000	2750-70-3800-75-4400
2.	2610-60-3150-65-3540	2750-70-3800-75-4400	3050-75-3950-80-4590
3.	2650-65-3300-70-4000	3050-75-3950-80-4590	3200-85-4900
4.	2750-70-3800-75-4400	3050-75-3950-80-4590	3200-85-4900
5.	3050-75-3950-80-4590	4000-100-6000	4300-100-6000
6.	**3200-85-4900**	**4000-100-6000**	**4300-100-6000**
7.	3625-85-4900	4300-100-6000	4500-125-7000
8.	**4000-100-6000**	**5000-150-8000**	**5500-175-9000**
9.	4300-100-6000	5000-150-8000	5500-175-9000
10.	4500-125-7000	5300-150-8300	5900-200-9900
11.	5000-150-8000	5500-175-9000	6500-200-10500
12.	5300-150-8300	6500-200-10500	8000-275-13500
13.	5500-175-9000	6500-200-10500	8000-275-13500
14.	5900-200-9900	8000-275-13500	9100-275-14050
15.	6500-200-10500	8000-275-13500	9100-275-14050
16.	6500-200-11100	9100-275-14050	10000-325-15200
17.	8000-275-13500	9100-275-14050	10000-325-15200

வரிசை எண்கள் (1)	சாதாரணநிலை (2)	தெரிவுநிலை (3)	சிறப்புநிலை (4)
18.	9100-275-14050	10000-325-15200	12000-375-16500

(வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது)

12. உண்மையாகவே, அட்டவணை II-இன் வரிசை எண் 8-இன்படி ஒரு சில உள்ளாட்சி துறைகளால் ஒருசில ஓட்டுநர்களுக்கு தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறையை நிர்ணயிப்பதில்தான் ஒட்டுமொத்த பிரச்சினையின் மூலக்காரணமும் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து, அதன் அடிப்படையிலான அந்த ஊதிய நிர்ணயம் தவறானதென்றும், மறுஆய்வு செய்வது அவசியமென்றும், எங்கெல்லாம் மிகுதியான ஊதியங்கள் வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றை பிடித்தம்செய்யும் ஓர் ஆணையுடன் அனைத்து அரசு செயலாளர்களுக்கும் மற்றும் துறைத் தலைவர்களுக்கும் 31.12.1998-ஆம் தேதியிட்ட கடித எண் 96900/பி.சி./98-2-ஐ நிதித் துறை அரசு இணைச் செயலாளர் அனுப்பினார்.

13. 2006-இல் 25.4.2006-ஆம் தேதியிட்ட கடித எண் 13921/கே/2005-I-இல் உள்ள செயல்முறை ஆணை மூலம் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-ஐ நிர்ணயிக்கக்கோரி தமிழ்நாடு அரசுத் துறை ஓட்டுநர்கள் மைய சங்கத்தின் முறையீட்டினை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தங்கள் (இ) துறையின் செயலாளர் நிராகரித்தார். இது

உயர் நீதிமன்றத்தின் முன்பு ஓட்டுநர்கள் சங்கத்தால் நீதிப்பேராணை மனு எண் 34800/2006-இல் எதிர்க்கப்பட்டு, மேற்சொன்ன செயல்முறையாணை, அரசாணை நிலை எண் 162-ஐ குறிப்பிடவில்லை என்ற காரணத்தின்பேரில் அது அனுமதிக்கப்பட்டது. அரசாணை நிலை எண் 162-இன்படியாக தீர்மானிக்கப்படுவதற்கு நிதித் துறையின் முன்பு புதியதாய் முறையீடு செய்ய சங்கத்திற்கு பணிக்கப்பட்டது.

14. எனினும், அம்முறையீடுங்கூட 1.10.2007-ஆம் தேதியிட்ட கடித எண் 63685/சி.எம்.பி.சி./2006-1-இன் மூலம் நிதித் துறையினரால் நிராகரிக்கப்பட்டது. அது பின்வருமாறு தெரிவித்துள்ளதாவது:

> "3. ஆகவே, ஓட்டுநர்கள் பதவிகளுக்கு வழங்கப்பட்ட சாதாரண ஊதிய ஏற்றமுறையின் அடிப்படையில் 13.4.98-ஆம் தேதியிட்ட நிதித் துறை (பி.சி), அரசாணை நிலை எண் 162-இன் அட்டவணை II-இல் ஆணையிடப்பட்டவாறு தெரிவுநிலை/ சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளுக்கு ஓட்டுநர்கள் தகுதி வாய்ந்தவராகிறார்கள். அவ்வகையிலான அனைத்து பிரிவினர்களும் சாதாரண நிலையான ரூ.3200-4900-ஐ பெறும் ஓட்டுநர்களுக்கு இணையாக தெரிவுநிலைக்கு ரூ.4000-6000 மற்றும் சிறப்புநிலைக்கு ரூ.4300-6000 முறையே பெறுவதற்கு தகுதி வாய்ந்தவர்களாகிறார்கள். மேற்கண்ட

அரசாணை, 1998-ஆம் ஆண்டு ஆட்சிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது, மேலும், மேற்குறிப்பிடப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ள பலன்கள் ஓட்டுநர்களுக்கு மறுக்கப்படவில்லை. எனவே, கோரிக்கையில் நற்கூறுகள் ஏதுமில்லாததால் தாங்கள் வேண்டிக்கொண்டவாறு பரிசீலிப்பதற்கு இல்லை."

15. மேற்கண்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தொகுப்பு நீதிப்பேராணை மனுக்கள் உயர் நீதிமன்றம் முன்பு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டன. அரசாணை நிலை எண் 162-க்கிணங்க ஊதிய ஏற்றமுறையை நிர்ணயிப்பதற்கான உத்தரவுடன் இந்த நீதிப்பேராணை மனுக்களும் அதனுடன் தொடர்புடைய வழக்குகளும் உயர் நீதிமன்றத்தால் நீ.பே.ம. எண். 4288/ 2008-இல் 30.9.2008-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை வாயிலாக அனுமதிக்கப்பட்டன. இது உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் 1.9.2009-ஆம் தேதியிட்ட தீர்ப்புரையின் வாயிலாக உறுதி செய்யப்பட்டது.

16. பின்னிட்டு, இதே உயர் ஊதிய ஏற்றமுறை பலன்களைக் கோரி இதேபோன்று நிலையிலுள்ள மற்ற சில ஓட்டுநர்களால் வேறுபல நீதிப்பேராணை மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. நீ.பே.ம. எண் 1418/2001-இல் உயர் நீதிமன்றத்தின் தனியமர் நீதியரசரால் பிறப்பிக்கப்பட்ட 18.11.2013-ஆம் தேதியிட்ட தீர்ப்புரையின் குறிப்பிடத்தக்க விதிவிலக்குகளுடன், அதனுடன்

தொடர்புடைய வழக்குகளிலும் மற்றும் இங்குள்ள கேள்விக்குள்ளான தீர்ப்புரையிலும் மேற்படி விவாதிக்கப்பட்ட முந்தைய தீர்முடிவுகளின் அடிப்படையிலும் இம்மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

17. அதிகப்படியாக கோரப்பட்ட ஊதிய ஏற்றமுறைகளுக்கு ஓட்டுநர்கள் தகுதி வாய்ந்தவர்கள் அல்லர் என்று முடிவெடுத்து, அரசாணை நிலை எண் 162-ஐ கூர்ந்தாராய்ந்ததின் அடிப்படையிலும், ஓட்டுநர்களுக்கு கொடுத்த முந்தைய ஊதிய ஏற்றமுறைகளின் வரலாற்றின் அடிப்படையிலும், முந்தைய தீர்ப்புரைகள் மற்றும் ஆணைகளில் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்திலிருந்தும் இவ்விரண்டு தீர்ப்புரைகளும் வேறுபட்டுள்ளன. (மேற்கண்ட) நீ.பே.ம. எண் 4288/2008-இல் கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களாலோ அல்லது நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் நீதியர் ஈராயத்தாலோ தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய எற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000 வழங்கும் குறிப்பிட்ட பணித்தல் ஏதுமில்லை என்று உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயங்களின் தீர்முடிவுகளிலிருந்து முகப்புரையிலேயே வேறுபடுவதை அவர்கள் நியாயப்படுத்தியுள்ளனர். இந்த உயர் ஊதிய ஏற்றமுறைகளை வழங்கிய பின்னிட்ட நீதிப்போராணை மனுக்களைப் பொறுத்தவரையில், அவை அனுமதிக்கும் கட்டத்திலேயே தீர்வு செய்யப்பட்டிருந்ததால் (சில வழக்குகளில் அரசுக்கு அறிவிப்பின்றியும்) புறக்கணிக்கப்படவேண்டியதாகிவிட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

18. உயர் நீதிமன்றத்தின் முந்தைய ஒருங்கிணைந்த ஆயங்களால் எடுக்கப்பட்ட ஒருமித்த கருத்திலிருந்து கேள்விக்குள்ளான தீர்ப்புரையிலுள்ள இந்தப் பிறழ்வைக்கொண்டு உயர் நீதிமன்றம் பரிசீலனை செய்வதற்குப் பதிலாக நீதியர் பேராயத்திற்கு வழக்கினை குறித்தனுப்பியிருக்கவேண்டுமா? என்பதை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும். இது, (மேற்கண்ட) நீ.பே.ம. எண் 4288/2008-இல் உள்ள தனியமர் நீதியரசரின் தீர்முடிவுகளையும் மற்றும் நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் உள்ள நீதியர் ஈராயத்தின் தீர்முடிவுகளையும் கூர்ந்து வாசிப்பதற்கு தகுதியுடையதாக்குகிறது. இந்நீதிமன்றங்கள் முன்பு உள்ள இத்தீர்முடிவுகளின் முதன்மையான பிரச்சினையாதெனில், மேலே விவாதிக்கப்பட்டவாறு, ஓட்டுநர் சங்கத்தால் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-க்கான கோரிக்கையை நிராகரித்த நிதித் துறையினரால் பிறப்பிக்கப்பட்ட 1.10.2007-ஆம் தேதியிட்ட ஆணையின் செல்லுந்தன்மை குறித்தேயாகும்.

18.1. அரசாணை நிலை எண் 162-இன்படி, கோரப்பட்ட உயர் ஊதிய ஏற்றமுறைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டன மற்றும் பல்வேறு அரசு துறையிலுள்ள குறிப்பிட்ட சில ஓட்டுநர்களாலும் இதுவரையில் பெறப்பட்டு வருகின்றன என்ற அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட 1.10.2007-ஆம் தேதியிட்ட ஆணையினை (மேற்கண்ட) தனியமர் நீதியரசர் அவர்களும், நீ.பே.ம. எண்

4288/2008 மற்றும் நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் நீதியர் ஈராயமும் இரத்து செய்தன. மேலும் மிக முக்கியமாக, 31.12.1998-ஆம் தேதியிட்ட கடிதத்தில், அத்தகைய உயர் ஊதிய ஏற்றமுறை நிர்ணயம் பிழையானதாக கருதப்பட்டவிடத்து, அது ஓட்டுநர்களின் உரிமையினைக் குறைக்கக்கூடியதாக இருக்காது என்றும், அவ்வகையில் ஒரு கடிதம், மாற்றியமைக்கப்பட்ட அரசாணைக்கு மாற்றீடாகவே செயல்பட இயலாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறாக, 1998 விதிகளின் அட்டவணை II-இன் வரிசை எண் 8-இன்படி உயர் ஊதிய ஏற்றமுறைகள் வழங்க எந்தவொரு வெளிப்படையான உத்தரவும் இந்நீதிமன்றம் வழங்காதபோதிலுங்கூட, அது அரசாணை நிலை எண் 162-இன்படி ஊதிய ஏற்றமுறையை நிர்ணயிப்பதற்கான நீதிமன்ற உத்தரவுகளில் உள்ளடங்கியிருப்பதாக நாங்கள் அறிகிறோம். அதாவது, உயர் நீதிமன்றம், நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் உயர் தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-க்கு அவர்கள் தகுதி வாய்ந்தவர்கள் என்ற ஓட்டுநர்களின் கோரிக்கையை உறுதிப்படுத்தவில்லை என்று கூற இயலாது.

18.2. எனினும், கேள்விக்குள்ளான தீர்ப்புரையில், உயர் நீதிமன்றம், அரசாணை நிலை எண் 162-இன் கீழ் உரிய ஊதிய ஏற்றமுறையை நிர்ணயிப்பது மட்டுமே நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் ஒருங்கிணைந்த ஆயத்தினரால் எட்டப்பெற்ற முடிவாகும் என்ற சங்கதியின்பேரில் மட்டுமே கவனம் வைத்தது, மேலும், தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய

ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-ஐ வழங்குவதற்காக குறிப்பிட்ட உத்தரவு ஏதுமில்லை. இதன் அடிப்படையில், உயர் நீதிமன்றம் ஊதிய ஏற்றமுறை தகுதியுடைமைக் குறித்த பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கு முற்பட்டு, மேல்முறையீட்டாளர்கள்-ஓட்டுநர்கள் தொிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.4000-6000 மற்றும் ரூ.4300-6000-க்கு மட்டுமே தகுதிவாய்ந்தவர்களாக கண்டறிந்து, நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் ஒருங்கிணைந்த ஆயத்திற்கு எதிராக முற்றிலும் மாறானதொரு கருத்துநிலையை எடுத்தது. எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்துப்படி, அவ்வாறான அணுகுமுறை, நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் ஒருங்கிணைந்த ஆயத்தின் தீர்முடிவினை குறுகிய நோக்கமுடன் பொருள்கொண்டதன் அடிப்படையிலானது, ஏனென்றால், அது மேலே குறிப்பிட்டுள்ளவாறு ஓட்டுநர்களுக்கான உயர் ஏற்றமுறைகளை வழங்குவதற்காக இந்த உத்தரவிலுள்ள குறிப்பான பணித்தலை மதிப்பீடு செய்ய தவறிவிட்டது. இவ்வாறு அதனை தவறாகப் புரிந்துகொண்டதன் அடிப்படையில் ஒருங்கிணைந்த ஆயத்தினரால் முன்னதாக எடுக்கப்பட்ட கருத்து நிலையிலிருந்து உயர் நீதிமன்றம் மாறுபட்டதாகத் தோன்றுகிறது. அப்படிபட்ட சூழ்நிலையில் நீ.பே.மே. எண்கள் 383-391/2009-இல் அதன் ஒருங்கிணைந்த ஆயத்தினரின் தீர்மானத்துடன் உயர் நீதிமன்றம் உடன்படவில்லை எனக் கண்டறியப்பட்டால், அது வழக்கைத் தானே முடிவுசெய்வதற்கு முற்பட்டிருக்கக்கூடாது எனவும், மேலும் நீதிய ஒழுங்குமுறையில்

அக்கறைகொண்டு, அது பரிசீலனை செய்வதற்குப் பதிலாக நீதியர் பேராயத்திற்கு வழக்கைக் குறித்தனுப்பியிருக்கவேண்டும்.

19. அவ்வாறிருக்கையில், வழக்கினை விரைந்து தீர்வு செய்யும்வகையில், வழக்கினை இக்கட்டத்தில் புதிய பரிசீலனைக்காக உயர் நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்புவது உகந்ததென நாங்கள் கருதவில்லை. ஆதலால், நாங்கள் தகுதிப்பாட்டிற்கிணங்க அதனை முடிவு செய்யவிருக்கிறோம்.

20. எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்துப்படி, அதேபோன்று பணியமர்த்தப்பட்ட தனிநபர்களுடனான சமநிலையைக் கோரியது நீங்கலாக, அரசாணை நிலை எண் *162*-இன்படி, விதிகள் *1998*-க்குரிய அட்டவணை II-இன் வரிசை எண் *8*-இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.*5000-8000* மற்றும் ரூ.*5500-9000*-க்கு அவர்கள் எப்படி மற்றும் ஏன் தகுதிவாய்ந்தவர்களாகிறார்கள் என்பதை நியாயப்படுத்த மேல்முறையீட்டாளர்களால் இயலவில்லை. அதற்குமாறாக, மாநில அரசிடம் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்களுக்கு பொருந்தக்கூடிய ஊதிய ஏற்றமுறைகளில் தொடர்ச்சியாக செய்யப்பட்ட திருத்தங்களைப் பார்வையிட்டதன்பேரில், விதிகள் *1998*-க்குரிய அட்டவணை II-இன் வரிசை எண் *6*-இன்படி தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான அதாவது ரூ.*4000-6000* மற்றும் ரு.*4300-6000* பொருந்தத்தக்கது என நாங்கள் கண்டறிகிறோம்.

20.1. கேள்விக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளவாறும், மேல்முறையீட்டாளர்களுக்கான ஊதிய ஏற்றமுறைகளை பின்நோக்கிச்சென்று 27.6.1989-ஆம் தேதியிட்ட நிதித் துறை அரசாணை நிலை எண் 666-இல் தேடி கண்டறியலாம், அதன்படி மாநில அரசு V-ஆவது தமிழ்நாடு ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தி தமிழ்நாடு திருத்தியமைக்கப்பட்ட ஊதிய ஏற்றமுறைகளின் விதிகள், 1989-ஐ வழங்கியது. இந்த விதிகளின் கீழ் 30 பொதுவகை பதவிகளுக்கான முதல்நிலை மற்றும் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய ஏற்றமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விதிகளின் அட்டவணையின் முதல் பகுதியில் வரிசை எண் 11-இல் ரூ.610-1075-லிருந்து ரூ.950-1500 வரை திருத்தியமைக்கப்பட்டு, ஓட்டுநர்களுக்கான ஊதிய ஏற்றமுறை குறிப்பிடப்பட்டுள்ளது.

20.2. அடுத்த திருத்தியமைப்பு 9.9.1989-ஆம் தேதியிட்ட நிதித் துறை அரசாணை நிலை எண் 818 வாயிலாக வரப்பெற்று, அதன்படி ஓட்டுநர்களுக்கான ஊதிய ஏற்றமுறை ரூ.975-1660-க்கு உயர்த்தப்பட்டது. பின்னர் 28.3.1990-ஆம் தேதியிட்ட நிதித் துறை அரசாணை நிலை எண் 304-இன்படி 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் பணிகாலத்தை நிறைவு செய்தவர்களுக்கு முறையே தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சாதாரணநிலை ஊதிய ஏற்றமுறையான ரூ.975-1660-ஐ கொண்டிருக்கும் ஓட்டுநர்கள் பதவிக்கான தெரிவுநிலை மற்றும்

சிறப்புநிலைக்கான வரம்புகள் ரூ.1200-2040 மற்றும் ரூ.1320-2040 என அமைக்கப்பட்டன.

20.3. இறுதியாக, அரசாணை நிலை எண் 162-இன் வாயிலாக விதிகள், 1998 அறிமுகப்படுத்தப்பட்டபோது, பதவியின்படியான ஊதிய ஏற்றமுறைகளை தீர்மானிப்பது, ஓர் ஊதிய ஏற்றமுறைக்குரிய ஊதிய ஏற்றமுறை என்ற அடிப்படையிலான தீர்மானித்தல் மாற்றியமைக்கப்பட்டது. ஏற்கெனவே மேற்படி விதிகளுடைய அட்டவணை-I-இல் கண்டுள்ளபடி, ஓட்டுநர்களுக்கு பொருந்தக்கூடிய ரூ.975-1660 என்ற ஊதிய ஏற்றமுறை ரூ.3200-4900-ஆக திருத்தியமைக்கப்பட்டது. இதற்காக அட்டவணை II-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒத்திசைவான தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகள் முறையே ரூ.4000-6000 மற்றும் ரூ.4300-6000 ஆகும்.

21. இப்பின்புலத்திற்கு எதிராக, அரசாணை நிலை எண் 162-இன்படி, மேல்முறையீட்டாளர்கள் கோரியபடி தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-க்கு சட்டப்படியாக தகுதியுடையவர்கள் அல்லர் என்ற எதிர்மேல்முறையீட்டாளர் வாதத்தின் சாரத்தை நாங்கள் கண்டறிகிறோம்.

22. ஆகவே, தீர்வு செய்யப்படவேண்டிய ஒரே கேள்வி யாதெனில், மேற்கண்ட பத்தி 5-இல் குறிப்பிடப்பட்டவாறு, உயர் நீதிமன்றத்தின் மற்றும் இந்நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி, இதுவரையில் பலன்களைப்

பெற்றுவந்துள்ள ஓட்டுநர்களுக்கு சமமாக கோர மேல்முறையீட்டாளர்கள் தகுதியுடையவர்களா? என்பதாகும்.

23. இது தொடர்பாக, மேல்முறையீட்டாளர்கள் சட்டப்படியாக அதற்கு தகுதியில்லாதவர்கள் என்று ஒருமுறை கண்டறியப்பட்டுள்ளபோது, அவர்கள் இந்திய அரசமைப்பின் வகுமுறைக்கூறு 14-இன் அடிப்படையில் அத்தகைய பரிகாரத்தைக் கோர இயலாது என்று கேள்விக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றம் முடிவுக்கு வந்தது சரியே என்பதை நாங்கள் கண்டறிந்தோம். ஒருநபர், முதலாவதாக அவரைப்போன்ற பணிநிலையிலுள்ள வேறொருவருக்கு வழங்கப்பட்ட பலனுக்கு சட்டப்படியாக தகுதியில்லையெனில், அவர் அத்தகைய பலனைக் கோருவதற்கு வகுமுறைக்கூறு 14-ஐ துணைகொள்ளமுடியாது என்பது தற்போது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. வகுமுறைக்கூறு 14. நேர்மறையான சமநிலை கோட்பாட்டினை மட்டுமே கருத்துரைக்கிறதேயன்றி, எதிர்மறையான சமநிலையை அல்ல, அதாவது, முறைகேடான அல்லது சட்டத்திற்கு மாறான ஒன்று நிலைப்பெற்றிருப்பதற்கு அதன்மீது சார்ந்திருக்க இயலாது என்பதாகும். உண்மையில் இக்கோட்பாடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளுக்குங்கூட விரிவுப்படுத்தப்படுகிறது என்று இந்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. ஆதலால், கீழமை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் தவறான உத்தரவின் அடிப்படையில் ஓர் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை வேண்டுரைக்க இயலாது. இது தொடர்பாக, **பசவராஜ் -எதிர்- நிலம் கையகப்படுத்துகை அலுவலர்,** *(2013) 14* எஸ்.சி.சி. *81*-இல் உள்ள

இந்நீதிமன்றத்தின் தீர்முடிவிலிருந்து பின்வரும் பகுதியைச் சுட்டிக்காட்டுவது பயனுள்ளதாக இருக்கும்:

> "8. அரசமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 14-ஆனது, மற்ற சந்தர்ப்பங்களில் தவறான தீர்முடிவுகள் வழங்கப்பட்டாலுங்கூட, அவை மோசடி அல்லது சட்டத்திற்கு மாறானவற்றை நிலைபெறச் செய்கிறதென பொருளாகாது என்பது நன்கு அறுதியிடப்பட்ட சட்டக் கருத்துரையாகும். மேற்படி வகையம், எதிர்மறையான சமநிலையைக் கருத்திற்கொள்ளவில்லை. ஆனால், நேர்மறையான அம்சத்தை மட்டுமே கொண்டுள்ளது. ஆதலால், இதேபோன்ற பணிநிலையிலுள்ள வேறுசில நபர்களுக்கு கவனக்குறைவாகவோ அல்லது தவறுதலாகவோ சில பலன்கள்/ பரிகாரங்கள் வழங்கப்பட்டிருக்குமானால், அத்தகையதோர் உத்தரவு, அதே பரிகாரத்தைப் பெறுவதற்கு மற்றவர்களுக்கு சட்ட உரிமை எதனையும் அளிக்காது. முந்தைய வழக்கில் தவறு இழைக்கப்பட்டிருப்பின் அது நீடித்திருக்க இயலாது. சமநிலை என்பது சர்வசாதாரணமான ஒன்று. அதனை சட்டத்திற்கு புறம்பாக கோர இயலாது, ஆகையால் அது எதிர்மறையான முறையில் குடிமக்களாலோ அல்லது நீதிமன்றத்தாலோ செயற்படுத்த இயலாது. தனிமனிதனுக்கோ அல்லது தனிமனித குழுவுக்கோ முறைகேடாக அல்லது

சட்டத்திற்குப் புறம்பாக ஏதும் இழைக்கப்பட்டிருப்பின் அல்லது தவறான உத்தரவு ஒன்று நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருப்பின், மற்றவர்கள் அதேபோன்ற தவறான உத்தரவைப் பிறப்பிப்பதற்காகவோ அல்லது அதே முறைகேடு அல்லது சட்டத்திற்கு புறம்பானவற்றை பெருக்குவதற்கோ அல்லது மீண்டும் மீண்டும் கூறுவதற்காக உயர்நிலை அல்லது மேல்நிலை நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை வேண்டுரைக்கவோ இயலாது. ஏதேனும் குறிப்பிட்ட தரப்பினருக்கு ஆதரவான ஒரு தவறான உத்தரவு/தீர்முடிவு, வேறு ஏதேனும் தரப்பினருக்கு அத்தவறான தீர்முடிவின் அடிப்படையில் பலன்களைக் கோருவதற்கு உரிமை அளிக்காது. மற்றவகையிலுங்கூட, வகுமுறைக்கூறு 14-ஐ மிகவும் விரிவுப்படுத்த இயலாது, அதாவது, அது நிர்வாகத்தின் செயற்பாடுகளைச் சாத்தியமற்றதாக்கிவிடும். (காண்க: சண்டிகர் நிர்வாகம் -எதிர்- ஜக்ஜித் சிங் [*(1995) 1* எஸ்.சி.சி. *745* : ஏ.ஐ.ஆர். *1995* எஸ்.சி. *705*], ஆனந்த் பட்டன்ஸ் லிமிடெட் -எதிர்- உறரியானா மாநில அரசு, [*(2005) 9* எஸ்.சி.சி. *164* : ஏ.ஐ.ஆர். *2005* எஸ்.சி. *565*], கே.கே. பல்லா -எதிர்- மத்தியப் பிரதேச மாநில அரசு, [*(2006) 3* எஸ்.சி.சி. *581* : ஏ.ஐ.ஆர். *2006* எஸ்.சி. *898*] மற்றும் புல்ஜித் கவுர் -எதிர்-

பஞ்சாப் மாநில அரசு, [*(2010) 11 எஸ்.சி.சி. 455 : ஏ.ஐ.ஆர் 2010 எஸ்.சி. 1937*].*)"*

இந்த முன்மொழிவுரையுங்கூட, சமீபத்தில் இந்நீதிமன்றத்தின் மூவரமர் நீதியராயத்தினரால் **ஒரிசா மாநில அரசு -எதிர்- அனுப்குமார் சேனாபதி** *(*உரிமையியல் மேல்முறையீடு எண் *7295/2019, 16,09,2019*-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை*)* என்ற வழக்கில் உறுதிபடுத்தப்பட்டது.

24. ஆதலால், மேல்முறையீட்டாளர்கள், தாங்கள் ஆரம்பத்திலேயே அவ்வகையான பலன்களுக்கு எவ்வாறு தகுதியுடையவர்கள் என்பதைக் காண்பிக்காமல் உயர் நீதிமன்றத்தின் முந்தைய தீர்முடிவுகளின் துணைகொண்டு மட்டுமே தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலைக்கான ஊதிய ஏற்றமுறைகளான ரூ.*5000-8000* மற்றும் ரூ.*5500-9000*-ஐ கோர இயலாது என்பது தெளிவு. அத்தகையதொரு சூழலில், அரசாணை நிலை எண் *162*-இன்படி மேல்முறையீட்டாளர்கள் சட்டப்படி தகுதிவாய்ந்த தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.*4000-6000* மற்றும் ரூ.*4300-6000*-இன் பலன்கள் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட இயலும் என்பது எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

25. ஆகவே, முன்சொன்ன விவாதத்தைக் கருத்திற்கொண்டு, கேள்விக்குள்ளான தீர்ப்புரையில் தலையிடுவதற்கான காரணம் ஏதும் நாங்கள்

காணவில்லை. இத்தற்போதைய மேல்முறையீடுகள் இதன்மூலம் தள்ளுபடி செய்யப்பட்டு, இந்த கேள்விக்குள்ளான தீர்ப்புரை உறுதி செய்யப்படுகிறது.

உரிமையியல் மேல்முறையீடுகள் என்கிற சிறப்பு அனுமதி மனுக்கள் (வழக்கு குறிப்பேடு எண் 42301/2017)

காலதாமதம் மன்னிக்கப்படுகிறது. அனுமதி வழங்கப்படுகிறது.

2. இம்மேல்முறையீடுகள், அரசாணை நிலை எண் 162-இன்படி சென்னை உயர் நீதிமன்றத்தால் பணியில் அமர்த்தப்பட்ட சில ஓட்டுநர்களின் ஊதிய ஏற்றமுறை தகுதியுடைமை தொடர்பாக நீ.பே.ம. எண் 2363/2013-இல் சென்னை உயர் நீதிமன்றத்தின் 5.1.2015-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுக்கு எதிராகவும், அதனை எதிர்த்து மறுஆய்வு விண்ணப்ப எண் 153/2016 தள்ளுபடி செய்த, 11.9.2017-ஆம் தேதியிட்ட இறுதி தீர்ப்புரை மற்றும் ஆணைக்கெதிராகவும், தமிழ்நாடு மாநில அரசு சார்பாக அதன் நிதித் (ஊதியப் பிரிவு) துறை முதன்மை செயலாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. இம்மேல்முறையீடுகள், மேற்படி தீர்வு காணப்பட்டவாறான அதே பின்புலம் கொண்டதாகத் தோன்றும் சங்கதிகளிலிருந்து எழுந்துள்ளன. மாநில அரசால் வழங்கப்பட்ட 8.11.2010-ஆம் தேதியிட்ட கடித எண் 63305/ஊதியப் பிரிவு/2010-1-இன் பத்தி 5-ஐ நீக்கக் கோரியும், சென்னை உயர் நீதிமன்றத்தில் பணி அமர்த்தப்பட்ட தொடர்புடைய ஓட்டுநர்களால் நீ.பே.ம. எண் 2363/2013 தாக்கல் செய்யப்பட்டது, அதன் அடிப்படையில் அரசாணை நிலை

எண் 162-இன் கீழ் விதிகள் 1998-இல் அட்டவணை II-இன் வரிசை எண் 8-இன்படி, தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளின் பலனை அவர்களுக்கு வழங்க அரசு மறுத்துவிட்டது. அதிலுள்ள மனுதாரர்களும் மேற்படி வரையறைகளின்படி ஊதிய ஏற்றமுறைகளை நிர்ணயிப்பதற்காக மாநில அரசுக்கு உத்தரவிடுமாறு கோரியுள்ளனர்.

4. இந்நீதியராயம், விதிகள், 1998-இன் அட்டவணை II-இன் கீழ் பதவி உயர்வு வாய்ப்புகள் எதற்கும் தகுதி வாய்ந்தவர்கள் அல்லர் என்பதால், உரிய ஊதிய ஏற்றமுறையின் முழுமையான பலன்களுக்குத் தகுதிவாய்ந்தவர்கள் என்ற காரணத்தின்பேரில் இந்த நீதிப்பேராணை மனுவினை அனுமதித்தது. மேலும், இந்நீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் இதேபோன்ற வழக்குகளின் தீர்முடிவினைப் பார்க்கையில், அந்த அட்டவணையின் வரிசை எண் 8-இன் கீழுள்ள பலன்களுக்கு ஓட்டுநர்கள் தகுதிவாய்ந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டது. அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு விண்ணப்பமும் உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படலானது.

5. மேலே விவாதிக்கப்பட்டவாறு, தொடர்புடைய ஓட்டுநர்கள் எந்தவொரு பதவி உயர்வின் வாய்ப்புகளுக்கும் தகுதி வாய்ந்தவர்கள் அல்லர் என்பது எங்கள் முன்பு மறுத்துரைக்கப்படவில்லை. அதனால், விதிகள் 1998-இன் அட்டவணை II-இன் கீழ் ஓட்டுநர்கள் உரிய ஊதிய ஏற்றமுறையின் முழுமையான பலன்களுக்கு தகுதிவாய்ந்தவர்கள் என்று உயர் நீதிமன்றம் சரியாகவே முடிவுக்கு வந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனினும்,

தமிழ்நாடு அரசின் வெவ்வேறு துறைகளில் ஓட்டுநர் பதவிகளில் பணி அமர்த்தப்பட்ட நபர்கள், விதிகள் 1998-இன் அட்டவணை II-இன் வரிசை எண் 6-இன்படி சாதாரணமான தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.3200-4900, ரூ.4000-6000 மற்றும் ரூ.4300-6000-க்கு மட்டுமே தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள் என்ற முன்கூறிய காண்முடிவின்படி பார்த்தால், தெரிவுநிலை மற்றும் சிறப்புநிலை ஊதிய ஏற்றமுறைகளான ரூ.5000-8000 மற்றும் ரூ.5500-9000-ஆக நிர்ணயித்து அட்டவணை II-இன் வரிசை எண் 8-இன்படி உயர் நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட்ட ஓட்டுநர்களுக்கு அத்தகைய ஊதிய ஏற்றமுறையை நிர்ணயிக்க உத்தரவிட்டதில் உயர் நீதிமன்றம் தவறிழைத்துவிட்டது என்று தீர்மானிப்பதற்கு எங்களுக்கு தயக்கமில்லை.

6. ஆகையால், அரசாணை நிலை எண் 162-இன் கீழ் விதிகள், 1998-இல் அட்டவணை II-இன் வரிசை எண் 6-இன்படி தற்போதைய மேல்முறையீடுகளிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு கிடைக்கக்கூடிய ஊதிய ஏற்றமுறையின் பலன்களை நிர்ணயம் செய்ய மாநில அரசுக்கு உத்தரவிடப்படுகிறது என்ற அளவுக்கு இம்மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன.

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்

மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணமுராரி

புது தில்லி,

18.12.2019.

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."